உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருநெறித்தமிழ்வேதச்
# சந்தப்பாமாவலி.


வித்துவான்

காஞ்சீபுரம்

சபாபதிமுதலியார்

துதிசெய்தவிது



புங்கத்தூர்

ம-ச்பாபதிமுதலியார்

கல்விவிளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னைமாநகரம்

குரோதனஹூ பங்குனிமீ.

திருச்சிற்றம்பலம்.

(திருநெறித்தமிழ்வேதமென்பவை)

திருஞானசம்பந்தசுவாமிகள் முதலியமூவர்முதலிகள் அருளிச்செய்ததேவாரங்கள்-திருமுறை (எ)

மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச்செய்த திருவாசகம்-திருமுறை. (க)

திருமாளிகைத்தேவர்முதலியசித்தபுருஷர்கள் அருளிச்செய்ததிருவிசைப்பா-திருமுறை. (க)

திருமூலநாயனார் அருளிச்செய்ததிருமந்திரமாலை-திருமுறை. (க)

சோமசுந்தரக்கடவுளருளிச்செய்ததிருமுகப்பாசுர முதலியபிரபந்தத்திருமுறை. (க)

சேக்கிழார்சுவாமிகள்அருளிச்செய்த திருத்தொண்டர்புராணம்-திருமுறை. (க)

ஆகக்கூடிய திருமுறை. (யஉ)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

வித்வான் காஞ்சீபுரம்

சபாபதிமுதலியார் அவர்கள்-மாணக்கர்

புரசை - அஷ்டாவதாநம்

சபாபதிமுதலியாரியற்றிய

# சிறப்புப்பாயிரம்.

நிலைமண்டிலஆ[illegible]யப்பா

ஓங்குமுயர்வு முவமையுந் தன்னினும்
வாங்கருமவ்வுனியின் மற்றையதரிதா
யெவ்வெவவொவ்வண மித்யத்துன்னுப
அவ்வவர்க்கவ்வண மமர்ந்தவர்பருவ
நோக்கியாங்காங்கு நுகர்வுறவூட்டி
நீக்கருந்தன்னடி நீழலிலிருத்தும்
பரசிவமிடையறப் பதியாய்க்குலவி
விரசுபுநிலைஇய மெய்த்திருவுறையுளாய்க்
குரவுராற்காட்டுங் குறியெனுமிலக்கணத்
தரமமைநிலைக்குத் தகுமிலக்கியமதா

யெல்லாமாகியொன் றல்லதுமாமெனு
வல்லார்சொல்வதற் கொல்காமுதலா
யெச்சமயங்களு மெவ்வெவ்வகைசொலு
மச்சொல்லெவையும் அடங்குமிருக்கையா
யுளவேதாகமங் கிளர்பொருண்முற்றும்
ஓதியுணர்ந்தாங் குப்வானெளிதிற்
சோதிவடிவத் துணையளப்பரிதா
யொன்றுயிரண்டாய்ப் பற்பலவுருவாய்
நின்றுள்பசுப்தி நிறைவிஃதாமெனக்
கருத்தானேயலாற் காட்சியானு
முருத்தாநோக்கி யுறுநருவப்ப
ஆழியீற்றினு மூலவாப்பெருமைசால்
வாழியநீள்வளன் மலர்வித்தகமதாய்த்
தென்னுடதனிற் பன்னிருபெயர்கொளுஉ
நன்னுடொருதா னுமெனநவிலச்
சீர்த்தகாழித் திருமாநகர்க்கண்
ஏற்றபெருங்கற் பெழிற்பகவதியார்
இயல்சிவபாத விதயர்செய்யருந்தவப்
பயனெவ்வுயிரும் பாத்துண்டலகிலாப்
பிறவிப்பெருங்கடற் றுறைகண்டகங்களி
அளும்பச்சிவநெறி தொல்புவியெங்கணும்

விளங்கிக்கிளர்ந்து மேவரவவதரித்
தொருமூவாண்டி னுயிர்க்குணர்வாஞ்சிவ
பெருமான்கருணையாற் பிராட்டிசுரந்தருள்
சிவஞானப்பால் தேக்கவாய்மடுத்துப்
பவமானத்தினர் பற்றியெய்தற்கொணா
அம்மையப்பனை யடல்விடைமீமிசை
யெம்மையாள்தந்தைக் கினிதுகைகாட்டிய
சதுர்கெழுஞான சம்பந்தசுவாமிகள்
முதலியமூவர் முதலிகள்திருமுறை.
வாதவூரர் மாணிக்கவாசகம்
ஆதியதிருநெறி வேதப்பனுவலுட்
சமயாசாரியர் சார்ந்துளதலங்களில்
அமைவொடுமெவ்வெவ் வற்புதப்பான்மை
யுயர்பாசுரத்தமி ழோதியாங்கருளின
ரியைவாமவற்று ளின்றியமையாத்
தெய்வத்தகைமை செறித்திலசவண்ணந்
தைவரமுற்றிலுஞ் சாற்றருமெதுகை
யொன்றேயாக வுலகிலிதுகாறு
மன்றவிவ்வாற்றான் வகுத்தொருநூலு
மிலையெனச்சொல்துறை யெங்கணும்படாமைப்
பலருநயந்தனர் பரிந்துவியப்பவு

மிசைத்தமிழ்தனக்குமீ திலக்கியமாமென
நசைஇயெவ்வெவரு நவின்றனர்களிப்பவும்
ஓதுதிருநெறித்தமிழ் வேதச்சந்தப்
பாமாலையெனும்பெயர் பன்னிப்புனைந்துளான்
நாமாண்புறப்பயில் நாவலர்மதிக்கு
மிலக்கியவிலக்கண மியலுறவுணர்தகை
விலக்கரும்வாய்மைசால் வித்தகத்துறையெனப்
பராவருமுயர்சிவ புராணங்கட்குரை
புலவராய்ந்து பொருட்சுவைசொற்சுவை
நலனிறைவுளவென நாடினரிசைப்பச்
செய்துதிசையெலாந் தேவரிந்திரன்
மெய்தவழ்யானையே மேவிக்காத்தென்னத்
தன்னிசையளாவத் தற்பெருமாட்சியைப்
பொன்னறியாதெனப் பொருந்துங்குரிசில்
எம்போலிக்குய ரிருநிதிபோலுங்
கம்போலிடும்வயற் காஞ்சிமாநகர்வாழ்
அணிகெழும்வேத சித்தாந்தசைவ
மணியெனும்சபாபதி வள்ளலுண்மகிழ்ந்தே

சிறப்புப்பாயிரம்-முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருநெறித்தமிழ்வேதச் சந்தப்பாமாலை.

காப்பு.

விநாயகர்துதி.

தனதனத்தனதான தனதனத்தனதான
தனதனத்தனதானனு.

திருநெறித்தமிழ்வேத வுணமடுத்துளமாலை
சிறியபுத்திரனருநர்ன்
இருளறுத்தியஜோதி மகிழ்வுறத்துணையாகு
மிறைபுகழ்த்திருநாரையூர்
ஒருவர்மெய்த்தமிழ்வேத முறையிருத்தியதான
முணர்தரத்திலேமேவியே
தெரிவுறுத்தியயானை முகமுடைச்சிறுபாலர்
திருமலர்ப்பதநாளுமே.

## சமயாசாரிகள் துதி.

அரிவையெற்பதிலேமுன் வரவழைத்துளகாழி
யரசடித்துணைசூலேநோய்
வருமொழிக்கிறைபாத மலர்குளத்திடைமாடு
வரவெடுத்தவர்தாளொடே
நரிபரித்திரளாகி வரவுருற்றினர்பாத
நளினமெய்த்துணையாகுமே
திருநெறித்தமிழ்வேத வணமடுத்துளமாலே
சிறியனற்பொடுபோடவே.

# நூல்.

பருதியிற்கலியாய விருடுமித்திடுமோவில்
பவமெனப்படுசேறுதான்
அருகிவற்றிடுமாறு புரியுமற்றெவரோனு
மகமுருக்குறநேருமால்
மருவுமற்பினர்தூய மனமலர்த்திடநீடு
மலைமகட்கொருபாகனூர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே, (க)

வருமதிக்கதிர்போல வமுதமிப்புவியாவு
மருரமுற்றிடவீசுமே
விரவுயிர்த்தொகைமுடு களைபறித்ததுவீறி
விளையமிக்கொளிமேவுமே
மருவுமற்பினர்வாய்கள் குமுதமொப்புறுமாறு
மலரவைத்திடுமீசனார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௨)

இருவினைக்கரமாகு மலவிருட்கொளியாகு
மெமதுயிர்க்கறிவாகுமே
கருவெனச்சொலநீடு மலைபிளப்புறுமாறு
கருதுசிற்றுளியாகுமே
வெருவுபற்பலபாவ விறகுசுட்டிடுமாறு
விரவழற்றிரளாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௩)

ஒருபிறப்பினிலோதி னெழுபிறப்புறுதீமை
யொழிவுறத்துணையாகுமே
குருமொழிப்படியோது மவர்தமைத்துயர்சேர்தல்
குலைதரச்செயுமீதலால்

இருமைவிட்டுயர்வீடு பெறுவழிக்குயர் ஞான
மினிதளித்திடுமீசனூர்.
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௪)

சரியைதட்புறநீறு மணமிருத்திடுதாறு
தழுவும்பொற்புறுபூவொடே
எரியவிட்டிடுதீப மினிதினிற்புகைதூப
மிலவையடுத்திடநாளுமே
கருதியிற்சிவபூசை நியதியிற்புரிவார்க
டுதிசெயற்கினிதாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫)

குருவிடைப்புரிபாவ மொடுபொருட்கரவாடல்
கொலைசெயப்படுபாவமோ
டுருவருத்திடுதீய மதுவினைத்தெரியாம
லயிலல்பொய்க்கரிகூறலே
எரிநெருப்பெதிர்மேவு விறகுபட்டிடல்போல
இரிதலுற்றிடநேருமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬)

பிரணவப்பொருளீது சதுர்மறைச்சிரமீது
பிழையினற்கலைமீதுசீர்
பரவுசித்திகளீது பசருநிட்டைகளீது
பனவரிட்டிகளீதரோ
தருமமற்றுளதீது துதிசெயப்படுவோர்க
டமதுளத்திதுநேரினே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭)

பரமதத்துவமாவ தெதுவெனத்தெரியாது
பரிபவப்படுவோருமே.
சிரமிசைத்தலைமாலை பனிமதிக்கலைசீறு
சினமூலைட்ப்படநாகமார்
விரிகடுக்கையுமேவு விமலருய்த்தறிவீர்க
ளெனவிளக்குறுமீசனர்
திருமறிக்கரநாத ரோருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮)

சரதமிப்புவிவாழு மவர்கள்பத்தியினோடு
தகுதிபெற்றினிதோதினே
விரதமெய்த்தவதான தருமமற்றெவையானும்
விளையுமப்பலனீயுமே

சுரநதிப்பிரயாகை குமரியிற்றகமூழ்கு
சுகிர்தமுற்றிலுமீயுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௯)

அரகரத்தொனியோடு துதிசெயுத்தமர்நாவி
லமுதமொத்தினிதூறுமே
ஒருமையிற்பலநாளு மகநெகச்செவிவாயி
லுளுமவர்க்கினிதாகுமே
பரமெனத்தனைநாடி மதுமலர்த்தொடைசூடு
பவர்வினைத்தொடர்சாடுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰)

அரனுடைப்பெயராகு மரனுருத்திறமாகு
மவனருட்பொலிவாகுமே
அரிதுதித்திடநாலு முகனுநித்தியமோத
வமரர்நட்புடனோதவே
விரியுநிட்களரூப ரரியசத்துவசீலர்
விரவுதற்பரமாகுவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௧)

வரமுறத்தினமோதி னரனருட்பிரசாத
முறவளித்திடுமோர்கிலார்
அருகிலுற்றிடுபாலை நிலனுகுத்திடுவாரை
யனையர்நிட்டைகள்கூடுவார்
சருகினைப்பல்நாளு நுகர்வரக்கினியூடு
தவமெனச்சிலர்வாடுவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௨)

பரிசுபெற்றிடுமாறு பரமனுத்தர்களான
புத்தகனைக்கவிபாடியே
அரிநெல்குத்திடலோவி யுமிகள்குத்திடுவாரி
னறிவுகெட்டவராகுவீர்
உரியசித்தமதோடு மிதிலொர்சொற்றெரிவீர்க
ளெனினுமக்கருளீயுமே
திருமறிக்கரநாத ரொருபிலறச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௩)

உரிசையிற்றயிர்பானெ யறுசுவைக்கறிசோறு
முணவுயிர்த்துணையாகுமோ
காரணசுத்தியினோடு மிதுபடித்திடுவோர்கள்
மருதுயிர்த்துணையாகுமே

மரணமுற்றிடுபோது மனமிகத்தெளிவாக
மருவவைத்திடுமாலரோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௪)

வரிசைமுத்துகள்போல வெழுதியொத்திடலாதி
வகைமைமுற்றிலுநீடவே
அரியபுத்தகமாக நறியமைக்களிபூசி
யரனெனத்தனைநாடியே
அரிசனத்திறுசேடை மலர்பறித்திடுவோர்க்க
ளவமறச்செயுமாசிலார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௫)

பிரியம்வைத்தலர்தூவி யுச்சரிப்புடனோது
பெரியருக்கிடர்தீரவே
மருமமத்தியிலாமை முதிருபத்தியவோடு
வளர்கிருட்டியினீள்பலோ
வரைநிகர்த்திடும்யானை யுரிவைபெற்றிடுதூய
வடிவளிப்பதுபாரமோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௰௬)

தருவினிற்பொலிவாவ தமரர்கற்பகதாரு
　　தழுவுமற்றுளபூவிலோ
மன்ாமலர்க்குலமாகு மலைகளிற்குலமேரு
　　வளர்பசுக்களின்வானிலார்
சுரர்களிப்புறுதேனு வெனமையளித்திடுமீசர்
　　துதிகளிற்பொலிவாவதோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
　　திருநெறித்தமிழ்வேதமே. (௰௭)

வருகமுப்புவநேச பரிதிமெய்ப்பிரகாச
　　வருகசித்தசநாசனே
வருகசத்திதனேச வருகமுப்புரகால
　　வருகசிற்குணதேவனே
வருகநிட்களரூப வருகபத்தனையாள
　　வெனவழைத்தெதிர்கூவுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
　　திருநெறித்தமிழ்வேதமே. (௰௮)

அருள்கநற்சரிதாதி அருள்கபத்தர்கள்பூசை
　　யருள்கபத்திபுமீதலால்
அருள்கவச்கயிலாச மருள்கநிற்கருகாக
　　வமருமப்பதம்ரூபமோ

டருள்கறித்தியவாழ்வு மமலவிப்பிரசீல
அடியருக்கெனவோதுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (யகூ)

கருவிழுப்பதொடாறு மலவிருத்தியினீடு
கலகமுற்றிலுமோவியே
இரவுநப்பகலான தறுநிலத்திடைமேவ
வினிதளித்திடுமாடுசீ
றரவமெய்ப்பணியாளர் நிமலர்நித்தியரான
வமலர்பொற்பொதுவாடுவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உய)

சுரபிகற்பகம்வேழ மணியுடைப்பெருவாழ்வு
தொடரறுத்தடிதாவென
ஒருதலத்திடைமேவி யுறுபசிக்கிலையேனு
முண்வுதுய்த்தினிதோதினே
அரனருட்கணநாதர் குழுவினுட்பொலிவாக
வமருமெய்ப்பதமீயுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உக)

இருதயத்தினிலாசை மிகுதிபெற்றனரோனு
மிழிகுலத்தவரோனுமே
உருவினிற்பெரிதான வவயவக்குறைவாகி
யொழுகுமற்றெவரோனுமே
ஒருபடித்தினிலோதி லொழிவிலப்பரநாத
வுற்றவுறச்செயுமீசனுர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௨௨)

விரிதிரைக்கடலாடை நிலமகட்கணிபோல
மிளிர்தலத் துறுமீசனுர்
தரிசனப்பலன்யாவு மினிதளித்திடுமீது
தவறில்சத்தியமாகுமே
இரசிதக்கயிலாய வரையுடைத்திருவாள
ரெமையளித்திடுமாவலார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே (௨௩)

கரிகறுப்பகலாத வகைமையிற்செறிதீமை
கழிவதற்குணராதுபேர்
இருளிடத்தொழியாத சிறியபுத்தியனுன
வெளியனற்பொருளோரவே

கருணையுய்த்திடும்வீடு புகவளித்திடுமீது
சரவெனத்தெரிவீர்களோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே (உச)

பரமனைப்புகழ்மூவர் திகழ்கைமுத்திரையோடு
பதிகளிற்பெரிதானதாய்
வருதிலைப்பதிமேலை மதில்மறைக்கிடைமேவி
வளமைமிக்குளநாளாயூர்
மருவுமத்தகயானை முகர்தெரிப்புறஞால
மதின்வெளிப்படலானதே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உரு)

அரியருத்திரபார்வை மணிகளைச்சிரசாதி
யணியுமற்றிடம்யாவுமே
தெரி[illegible]ரப்புனைவாரு மொளிருநெற்றியினீறு
தினமெடுத்தணிவாருமே
உரியபத்தியினோது தகுதிபெற்றுளதாகி
யுலகினிற்புகழ்மேவுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உசா)

அரமியத்தலமேவி நிலவெறித்திடும்போதி
லரிவையர்க்கெதிர்பாடுவார்
அரன்டிக்கடியார்த மிசைபடித்திடவோதி
லருவருத்திடுவாரொலா
நரகினுக்குரியார்கள் பரமனுக்குரியார்கள்
நவிலுமற்புறுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உஎ)

புரசைமத்தகயானை யுயர்பிடர்த்தலையேறு
புரவலர்க்கிறையாகுவார்
குரகதத்தினையுரு மளகைநற்பதியாவர்
குலிசவற்படையாளியா
நிருபனுக்குயர்வாவ ரிவைகளுக்குறுமேது
நிமலநித்தியதேவனார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (உஅ)

பிணாதுளித்திடுபாலி னுறுநெய்கட்டையினூடு
பிறழுமக்கினிபோலவே
விரவுயிர்க்குயிராகி யணுவினுக்கணுவாகி
விரவுமெய்ப்பொருள்காணவே

தெரிவுறுப்பதுஞான நிலைகொடுப்பதுமேரு
        சிலையெனக்கணையேவினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
        திருநெறித்தமிழ்வேதமே. (உகூ)

விரிசுளைப்பலவாழை மதுரமிக்குளசூத
        விழைகனிச்சுவைபோலவே
பரவுமற்பினர்நாவி னிடையினித்திடைபோய
        பவமனைத்தினுமாகவே
புரிவினைத்தொடர்தானு முளதெனிற்கெடுமாறு
        பொருதழித்திடுமீசனார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
        திருநெறித்தமிழ்வேதமே. (௩௰)

ஒருமனத்தடியார்க டமைப்படுத்திடவேம
        னுளநினைப்புறுமாயினே
வெருவலுற்றவனோடி மறைவதற்கிடனாடி
        விழவரற்றிடமாறியே
கருவமுற்றிலுமோயும் வகையியற்றிடும்வீறு
        கதியெமக்கருளீசனார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
        திருநெறித்தமிழ்வேதமே. (௩க)

கருமணற்கிணையான மருமலர்க்குழலார்கள்
கலவிதுய்த்திடுமாசையே
விரவுறத்திரிவீர்க ளதைவிடுத்திதிலாசை
விரவிடிற்கதிசேரவே
அரியபத்தியினோதி யறிதிரற்புதமேய
அடியர்சொற்கொடுமோர்குவீர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௩௨)

சிரவணப்படுமேனு மனனமுற்றிடலான
செயலுறப்படுமேனுநேர்
தரிசனப்படுமேனும் வனாதலுற்றிடுமாறு
தகுதியிற்படுமேனுமோர்
ஒருகணப்பொழுதேக யிலைமலைத்தலைமீதி
லுறவிருத்திடுமீசனூர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௩௩)

இருள்கெடுத்தெழுபானு விரிகதிர்ச்சசிதூய
எரியிவற்றுறுபார்வையார்
கரடமத்தகதான மிழிபுழைக்கரமேய
கரியுரித்திடுபோர்வையார்

பொருமயர்குழிவிழு மெமையெடுத்தருளாழி
புகவிடச்செயுமீசனார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௪)

மரமனைத்தினும்வாவு பறவையொத்திடரேறு
மருவுயிர்ப்பயிர்வாடுறு
தரனருட்பெருவாரி பொழிதரப்பணஞான
வமுதருத்தினராதிமூ
வருமிசைத்துளதாகு முமைதனைப்பெருவாம
மருவல்வத்தவராதியார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௫)

பொருளிளநச்சுவர்மாடு மனைகணச்சுவராலட
புனையநச்சுவர்பூணெலா
மருவநச்சுவர்தேக நிலையெனக்கருதின
மடையர்மற்றிதுயாவுமே
அருவருப்பவர் தூய மனதினச்சுறலான
தடியருக்கமுதாயினார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௬)

துதி.

புரிமுறுக்கவிழ்கோதை வளர்முலைத்தடமாதர்
 பொருணிலத்துறுமாசையால்
அருவினைத்தொடர்நீளு மதையறுத்திடும்வாளி
 யமலர்நித்தியவாழ்வினர்
வருமுயிர்க்குயிராவ ரெமையளித்திடுமீசர்
 மறைதொடற்கரிதாயினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
 திருநெறித்தமிழ்வேதமே. (௧எ)

ஒருமரத்தினிலேறி யொருமரத்திடைவாவு
 முறுமுமற்கடமானவே
உரவுமெய்ப்பொறிவாயி னுறுமடுத்துலவாத
 வுறுதியைப்பிடியாமலே
திரிதரப்படுதீய னுளநிலைத்திடுமாறு
 செய்யும்விடைக்கொடியாளனார்
திருமறிக்கரநாத னொருபிறைச்சடைநீதர்
 திருநெறித்தமிழ்வேதமே. (௧அ)

பெருமையிற்பொலிவான வழகினிற்புகழ்நீடு
 பொறுமையிற்புவியாளுமோர்
திருபனுக்கிணையாவை மதனனைச்சரியாவை
 திலமகட்கிணையாவைநீ

தருகெனக்கவிபாடு மதிவிடுத்திதுகூறு
தகுதியர்க்கருளீயுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ங௯)

திருவினைத்தையுமாறு படுதலற்றிடுமாறு
திடமுறத்தருமீதலால்
வரமனைத்தையுமோது மவர்களுக்கழியாத
வகையினிற்றருமாரனூர்
கருகநெற்றியினூய விழிவிழித்தவர்தூய
கனகநற்சபையாடுவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சம)

மிருகமெய்ச்செவியூடு புகினுமற்றதனூவி
வினைகெடச்செயுமேனுமோ
குருகுடைச்செவியூடு புகினுமப்படியேசெய்
குறுமெனப்பெரியோர்களால்
உரைசெயப்படுமீது சரதமற்பினர்யாரு
முணர்திர்சொற்பொருளாயினூர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சக)

மரணமுற்றிடுவார்க ளெதிர்படித்தவர்காது
மருவிடப்படுமாயினோ
கருவினிற்சிசுவாகி வருபவத்தொடர்தீர்வர்
கயிலையிற்கணநாதரோ
டொருமையுற்றழியாத நிலைமைபெற்றிடுவார்க
ளொருதனிப்பரமாயினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சஉ)

உருமிடித்தொனிமேதி யினவொருத்தலினேறி
யொருகையிற்றடிபாசமோர்
கரமதிற்கொடுகால னடியனைத்தொடுமாறு
கருதினச்சமனுவிதான்
வெருவிடச்செயும்வான்மி நசனைவிட்டகலாத
விமலர்பொற்பொடிபூசுவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சஙு)

சருகுதின்றிடுவார்கள் புனல்குடித்திடுவார்கள்
தவநிலைப்புறநீறுகால்
பருகலுற்றிடுவார்க ளவைவிடுத்தினிதாய
பதிகமற்புடனோதிலோ

பரகதிக்கருகாக மருவவைத்திடுநீடு
பரசுகைத்தலமேயினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சச)

அருநெறிக்கொடுபோவர் கயிறுகட்டுவர்தோளி
லலறமொத்திடுவார்கடை
நரகிடைத்தளுவார்க ணமன்விடுத்திடுதூதர்
நலிதல்பட்டவரோடவே
புரியுமற்புடனோர்சொல் பதிகமர்ந்திதிறேது
புனிதருக்கெனவோர்குவீர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சரு)

தருமநற்றவதான மணுவுமூற்புரியாத
சவலனெய்த்திடமூடமோர்
கருவினைக்கொடிமூல மதுசெழிப்படையாது
கருகிடப்பரிவாகியே
புரியுமச்சிவபோக மருவவைத்திடும்வீறு
புரமெரித்திடுமீசனர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சசா)

ஒருவழிப்படுநேய நிலையினிற்படாத
வுளநிலைத்திடவேவத்துவாம்
அரிய்சுத்தர்களுவி னடநடிப்பதுபாவி
யலைவிடுப்பதுசோதியார்
ஒருகரத்திடைசூல மொருகரத்திடைதீயு
மொளிரவைத்திடுமாதியார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சஎ)

ஒருசதத்தொகைமேவு பரிமகப்பலன்வான
வுலகளித்திடநேருமே
திரமுறப்படுமேகொ லழிவுபட்டிடனேகு
திறனுடைத்தெனவோர்குவீர்
பரசிவத்துதிபான பதிகமுற்றிலுமோது
பவர்சிவத்துறநேருமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சஅ)

குருவினைப்பரமாக நினைபுமுத்தமசீலர்
குறைவறுத்திடுமேலுமே
இருவினைத்தொடர்மாய முயறவத்தினர்பாவ
விருளகற்றிடுமேழையாய்

விரவுபொய்ப்புலையேனு மருள்பெறத்தருநேயம்
விடையுகைத்திடுமீசனூர்
திருமறிக்கரநாதரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சகூ)

உளைதெரிப்பரிதாகி யடியவர்க்கினிதாகி
யுவமையற்றதுமாகியே
எரிவிழித்திடுமேம னெமதிடத்துறமேவி
விரியலுற்றிடநூறுமே
விரிமலர்த்தவிசேறு மவனளித்திடநாடின்
வெருவியுட்கிடநேருமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருய)

உரவுமெய்ப்பெருநோய்கள் பெருகலுற்றவர்காதி
லொருவகைப்படவோதினே
விரவுமப்பிணியாவு மவணைவிட்டயலோட
விளையுமற்றதனூடுமே
இருவினைப்பிணிதானு மறமனத்துயர்போக
விளையுமெய்ப்பொருளாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருக)

தெரியநெற்றியினீறு பரன்விழிப்படுதூய்மை
திகழ்மணித்திரளாகமேல்
விரவிடப்பரிவோர்க ளிருகையொத்தியதாள
விதவகைப்படவோதினே
அரியயர்க்கரிதான வரமளிப்பதுமேலு
மர்னிடத்தருளீயுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருஉ)

விரைபுலத்தெறுவேடர் பகையனைத்தையுநூறி
விமலவித்தகராயினோர்
சிரமதற்கணிபோது மனவழிக்கொருசோதி
செவிதனக்கமுதாகுமே
உரைவகுத்திடுநாவி னுறுமதுத்தெளிவாகு
முவ்வமையற்றதுபேர்னுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருரு)

மரநிழற்கணிஞேறி னதன்வினைப்பவமாற
மலையுமப்படிமாறவே
புரியுமுற்பகல்காழி விரகரிற்பனைமேய
புனிதமெய்க்கரியாகுமால்

உரகநற்பணியென வெயிறுகச்சபவோடு
முரணிடத்துறவேய்குவார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௪)

வரிவளைக்கரமானி வழுதியற்புறதேவி
வனிதையர்க்கரசாயினுள்
தருபுனற்பொனிநாட னுதவுகற்புளபாவை
சயிலவிற்கரநாதரோ
பரமெனத்தெளிவாகு நிலையுணாத்திடுமீசர்
பவளமொத்துளமேனியார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௫)

அரியகற்குடிவீழி மிழலையர்ப்பதநாகை
யதிகைநற்பதிநாரையூர்
பெருமணப்பதியோடு விளமர்வக்கரைவான்மி
பெருமையிற்றிகழ்கோடிகா
வருதிருக்குடவாயில் கொடுமுடிப்பதிமேய
வளமைசொற்றிடுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௬)

திருவிடைச்சுரமாதி புரிகழுக்கிரிசேறை
திருவரத்துறைமாதைநீள்
திரிசிரக்கிரியூறல் திகழுருத்திரகோடி
சிவபுரத்தொடுபூவனூர்
மருகல்கச்சியும்வேதி குடிகடிக்குளமாறை
ம்கிமைசொற்றிடுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருள)

வெங்குரு

தெருளுறுத்தியதேவ குருவியற்றியபூசை
திகழ்தலத்தடமீதுசேர்
களையினுற்றிடுகான்மு னினைவுபெற்றழவீசர்
கருணைபெற்றருளாயதோர்
பனைமுலைத்திருஞான வமுதருத்தியவாயர்
பகர்தரப்பொலிவாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (ருஅ)

தோணிபுரம்

களையிடற்கரிதான மறையனைத்தையுமோது
கவுணியக்குலதீபனூர்

எரிமணிக்கடலேழு மவனியிற்புரளேழி
யினுநிலத்திடலாகியே
தளையிடைப்பொலிதோணி புரமெனத்திகழ்காழி
தனிலுதித்தவரோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௫௯)

கழுமலம்

திருமகட்கிடமான கமலமிக்குளவாவி
செறிகயற்குலம்வாவியே
பெருமரக்குலமோத வுடையுநெற்றுடைநீர்கள்
பெருகியிப்புவிமீதுவீழ்
தரவயற்பயிர்வீறு கழுமலப்பதிமேய
தலைவர்சொற்றொடையாமரோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௰)

சிரபுரம்

குளைபுனற்றடமேவு கமலமொட்டிளமாதர்
குயநிகர்ப்பதுமாகியே
விரிதலுற்றிடுபூவு மவர்முகத்தினைநேர
விதனமிக்கொருபோதுதான்

நெரிமுகத்தொடுவொடு சிரபுரப்பதிநாதர்
நிகரில்சொற்பெறுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (கூக)

புறவம்

புரிசையிற்கொடிதேவர் நிலையமுற்றினிதாடல்
புகழூருப்பசிமாதராள்
தெரிதலிற்றனதாடல் நிறுவியற்புதமோடு
செய்புநகைக்கிணையாகுமோ
பெரியமுத்தெனநீடு புறவநற்பதிமேவு
பெரியர்சொற்பெறுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (கூஉ)

ரோமசமகாரிஷி

உருவமுற்றிலும்ரோம முடையமெய்த்தவர்வேத
மொடுசிவப்பயிர்வீறவே
பரமதக்களைமாற வருளெனச்சொலிநாதர்
பணியதைப்புரிநீயெனு
அருள்செயக்கிளர்காழி யதனிலுற்பவமாகி
யவர்தமைப்புகழ்பாடலே

திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௩௩)

சுப்பிரமணியசுவாமி

இரணியக்கொடியோன துயிருணற்கொருதூணி
னிடையுதித்திடுமாயனார்
ஒருமகற்கிருகாது மூளைவுறத்தளைபோட
வுளாபணித்திடும்வாயினார்
மருவருட்படிவான கவுணியக்குலதீப
மதலைசொற்பெறுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௩௪)

இதுவுமது.

பொருமயிற்படையாளி வருமயிற்பரிமீளி
புகழ்குறக்கொடிபாகனார்
தருவிடைத்திகழ்தேவ பிடிதனைப்புணர்தோளு
சரவணத்திடையாவலார்
பரிவினிப்புவிமேவி யருளுமற்புதமான
பதிகமற்றிதுவாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே (௩௫)

திருஞானசம்பந்தசுவாமிகள்திருவவதாரம்

கரள்முற்றியதீய துளையெயிற்றரவான
கடுமைபற்றிய * காளிதான்
அரனைமுற்பகல்பூசை புரியுமத்தலமேவி
யவதரித்திசைநீடியே
ஒருதவச்சிவபாத விரதயர்க்குறுபால
ருணாசெயுத்தமமானதோர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சுசு)

இதுவுமது

பிரமனுட்பரிவோடு மலர்பறித்திடுபூசை
பெறுமகத்துவமேவியே
பொருவினற்றலம்வாழ விரிதிரைப்புவிவிற்று
புனைதிரத்தவநாடியே
கருவுயிர்த்திடுதூய பகவதிக்கொருபாலர்
களிமிகுத்தினிதோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (சுஎ)

---

* காளி-என்பது-அஷ்டநாகங்களிலொன்று
காளி-காழியெனமருவியது.

திருமுலைப்பாலருளியது

சிரபுரத்தவர்காழி புறவநற்பதியாளர்
சுருதிமுற்றிலுமோதினர்
பனாதனச்சிவஞான வமுதருத்தியபாலர்
பணிபவர்க்கநுகூலனர்
திரிமலப்பகையான தெனைவிடக்குருவாய
திருமறைக்குலரோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௮)

இதுவுமது,

அரனிடத்துறுதேவி குமரனைத்தருமாயி
யமலைசிற்பனாசோதியாள்
மருமலர்க்குழலாளெ முயிரினுக்குயிராகி
மகிழ்மலைக்கொடிமேலைநாள்
தருகிணத்துறுபாலொ டளவிலைவைத்திடுஞான
சலதிமிக்கிடவூறுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௯)

முத்துச்சிவிகைபெற்றருளியது

திருவரத்துறைகோயில்கொளுமுமைக்கொருபாகர்
திருவுளத்தருணீடியே

பரியமுத்தொளிவீறு சிவிகைமுத்தொளிர்தாரா
பகர்திருச்சினம்பராவுமே
தரவுளக்களிமேய தவமறைக்குலசீலர்
தகுதியிற்புகல்பாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭௰)

திருவாவடுதுறையில் உலவாக்கிழிபெற்றருளியது

அரசடித்திருமூல ரரியநிட்டைகள்கூடி
யமர்தலத்திறையாவலா
யருகலுற்றலவாதநிதிமுடிச்சினிதீய
வதுதனைச்சிவயாக்மே
புரியநத்தியதாதை களிகொளத்தருபாலர்
புதுமைமிக்குறவோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭௧)

விஷந்தீர்த்தருளியது

உரியதற்பெறுதாதை யுடனுதித்தவள்பால
னெடுவழிக்கொடுபோகியே
மருகலிற்கடிநாக விடமிகுத்தவன்வீய
மனமிளைத்தழுமாதுதான்

வெருவலற்றுளமோகை யதிகரித்திட ஞான
விரகர்சொற்றுளதாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (எ௨)

படிக்காசுபெற்றுவட்டந்தீரவோதியருளியது

கருணைமுற்படுசோறு மடியருக்கிடுமாறு
கடல்கள்சுற்றியபாரிலே
தெரிதரத்திருவீழி மிழலையிற்பெறுகாசு
செலுமிடத்துறு*வாசிதீர்
தரவுளத்தினில்ஆசை மிகுதிபெற்றிசையோடு
தமிழுரைத்தவர்வாய்மையே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (எ௩)

மறைக்கதவமூடத்திறக்கவோதியருளியது

நிறைபடுத்தியவேத முனமடைத்துளவாயி
னிலைதிறப்புறமூடவே
வருவழக்கமேநாளு முறவடுத்துளவேத
வனமதிற்புரிகாழியார்

---

* வாசி-என்பது-வட்டம்.

அருளளித்தெனையாளு மடிகள்சொற்பெறுபாட
லரியவர்க்கரிதாயினோர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭௪)

(மடத்திலிட்டதீயரசனுடலிற்புகுமாறருளியது)

மருவமைச்சரினோ டொருகுலச்சிறையாரும்
வளவர்புத்திரிமாதுமே
வரவழைத்திடவேகி யமர்மடத்தமணீச
ரிடுநெருப்பதுமாறியே
யரசுடற்புகவோது மருமறைச்சிறுபால
ரவர்மொழித்திறமாமரோ
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭௫)

(வாதுசெய்யவிடைபெற்றது)

பொருகயற்கணிபாக விதழிதுற்றியதார
புரமெரித்தருளாதியே
அனாயினிற்றொடுபோய வுடைதரித்தவரான
வமணர்கத்திடுவாதிலே
இரிகலுற்றவர்நாணபுரிதிதெற்றெனவேழி
னிசையினிற்புகல்பாடலே

திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (எசு)

(மங்கையர்க்கரசியாருக்குத்தேறுதல்கூறியது.)

வரிவளைக்கரமானி யெனைமிகச்சிறுபால
னெனமனத்துயர்கூர்தியோ
திருகுளத்தவர்தீன ரிவர்களுக்கெளியேன
லனுமைபெற்றுளபாகனார்
அருள்பொறுத்தவனுகு மெனவுரைத்தவர்பாட
லடியருக்கருள்சோதியார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (எஎ)

(திருநீறருளியது)

விரகர்சொற்படிபோன எரிசுரப்பிணியாகி
மிகவருத்திடமாழ்கியே
வெருவுக்ற்புளமானி பணியமற்றதுதீர
வெளியநற்பொடிபூசுவார்
கருதுயிர்த்தொகைஞான வழியினிற்புகுமாறு
கருணைவைத்தினிதோதினார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (எஅ)

(தீயிலேடிட்டருளியது)

எரிசிகைப்படுதீயி னடுவினிற்புகையாம
விடுநிறத்தொடுவீறவே
பரனுடைப்புகழோது பதிகநற்றமிழேடு
பதியவைத்தவைமேவுவோர்
தெரியவற்புதமோடு மறையெடுத்தவர்பாடல்
சிலைநுதற்பணைபாகனுர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௭௯)

(வைகையாற்றிலேடிட்டருளியது)

பரனருட்பெயர்சூழ்க பசுமறைக்குலர்வாழ்க
படிமிசைத்துயர்தீர்கென
வளையுமெய்ப்பொருளேடு நிலவுமுத்தலைவீசி
வருநதிப்பெருநீரிலே
விளைதலுற்றெதிரேற விடுமலர்க்கரர்காழி
விகிர்தர்சொற்பெறுபாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௰)

(ஆண்பனைபெண்பனையாகவருளியது)

அருமறைக்குலனா னொருவன்வைத்திட நீடி
யடர்பனைத்தருயாவுமே
யொருகுலைக்கனியாவ தினம்விடுத்தில நாத
னொருவனுக்கிவையாமெனா
உரைசெயப்பனைகாய்கள் தரும்வகைத்தமிழோதி
யுவகைமிக்கவர்பாடலே
திருமறிக்கர நாத ரொருபிறைச்சடை நீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௧)

(அங்கம்பூம்பாவையாகவருளியது)

இருவர்முற்பகரேட வவர்தமத்தியினீடு
மெரிதழற்சிலையாயினார்
திருவருட்சிவநேசர் மகிழ்வுபெற்றிடுமாறு
திருவுளத்தருணீடியே
கருகுமஸ்தியிலோர்பெ ணுருவளித்திடவேசொல்
கவுணியக்குலர்வாய்மையே
திருமறிக்கர நாத ரொருபிறைச்சடை நீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௨)

(திருமணத்தில்சோதியுடனயிக்கமானது)

பெருமணத்துறுகோயி லளவுமொய்த்தெழுசோதி
பெருகமற்றதனூடுவாழ்
ஒருமணத்தெழில்காணவிரவுமுத்தமர்யாரு
முறுமுவப்பொடுபோகென
மருவுகற்புளமாதி னொடுமடுத்தவர்வாய்மை
மனமொழிக்களவாகிலார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௩)

(திருநாவுக்கரசுசுவாமிகள் திருவவதாரம்.

உமைமனக்குலவாத பரமெனத்திகழ்சோதி
யுவகையுற்றிடு*தேவியார்
கரநதிக்குல தீபர் வளர்கொறுக்கையராதி
கலையிருப்பிடமாயினர்
ஒருமனத்தவர்நாவி னரசுமைத்தருள்பாட
லொளிருமுத்தலைவேவினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௪)

---

* தேவியார்கரநதி-என்பது-கங்கை
கங்கைக்குலதீபரெனவே-வேளாளர்குலத்தாரென
அறிக.

(சூலைநோய்தீர்ந்தது)

அருகர்பொய்த்திறமோது சமயமுற்றுடனாக
வவதரித்திடுதாயனார்
உரகநற்பணியாள வடியனுக்கிளையோனு
முனதுபத்திமைமேவவே
அருளெனக்கனிவோடு தரவருத்தியசூலை
யறவுரைத்தருள்பாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (அ௬)

(நீற்றறையிலிட்டது.)

எரிநெருப்பனநீறு துறும்அறைக்கணிலேமு
னிடவுமற்றதுமாசுதீர்
சுருதிபற்றியவீணை யெனுமிசைத்தமிழ்மாலை
சொலிமலர்த்தடநேர்வே
அரனையுட்கொடுதாழு நிலைமையுற்றிடுநாவி
னரசர்பொற்புறுவாய்மையே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (அ௭)

(விஷமூட்டியது.)

அரவினுட்டுளைவாயின் விடமொடுத்திடுபாலை
யமணர்முற்றரவோடுமே

வெருவலற்றிறைபாத மனதிலுற்றிடநேசம்
விரவிபற்புதம்வீறவே
பருகியச்சமணீச ரகமயக்குறுமாசெய்
பவர்மொழித்திறமாகுமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௭)

(கைலைக்கேகச்சென்றருளியது.)

மருவுநற்கணநாதர் திகழுமக்கயிலாய
வரையிலுற்றிடவேகியே
கரதலத்தொடுகாலும் அருகமுற்படுகோதல்
கரையறுத்தெழுநீர்மையால்
உரமுறப்புரள்போதி லரனடுத்தருளிய
வுவகைபெற்றவர்பாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௮)

(சுந்தரமூர்த்தியார்கயிலாயபதியினருகிருந்தது.

நரைதிரைத்துயர்போய முனிவர்செட்புறுதாய
நதிமதிச்சடைமேயினர்
குருமணிக்கயிலாய மலையர்பொற்பொடிபூசு
குலவுமற்பெறுதோளினர்

அருகினுற்றவராகி சிவமறைக்குலதீப
ரருளினிற்புகல்பாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௮௯)

(சுந்தரமூர்த்திசுவாமிகள்திருவவதாரம்)

சிருவநெய்த்துளியோம வெரியினுய்த்திறைபூசை
செய்புமறைக்குலநீதியார்
பெருகொளிக்கயிலாய விறையணுக்கரினேய
பெரியரிச்சையினுலநீள்
மரமலர்ப்பொழிலுவ னகரிடத்திசைஞானி
பெறுநலத்தவரோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௯௰)

(திருமணந்தவிர்த்தருளியது.)

மருமலர்ச்சுருளோதி யுமைதிருச்சகிமாரா
மனதுநச்சியபான்மையால்
அரியவிப்புவிமேவி நிகழ்மணத்திறமோவி
யடிமைமெய்த்தவராகியே
பரவுபொற்புளமாது பரவையைப்புணர்தூயர்
பகருமுத்தமிழ்வாய்மையே

திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௧)

(திருவெண்ணெய்நல்லூரில்தடுத்தாட்கொண்
டருளியது

* அரனருட்டுறையான பெருமைமிக்குளகோயி
லதின்வ்வித்தினிநாளுமே
ஒருமைபெற்றனையாகி நமைதிருத்தமிழ்மாலை
யொளிர்சிவத்தலம்யாவுமே
விரவியற்புதமோடு முறையெனத்தெளிவாக
விளுமொழிப்படியோதினர்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௨)

(ஞானோபதேசம்பெற்றருளியது)

சரசுடைத்துறையூரி னிறைவதத்துவமான
சளமெனைத்துளயாவுமே
யொருவமெய்த்தவஞான மருவிநித்தியவாழ்வு
முறவளித்தெனையாளென

*அரனருட்டுறை-என்பது-திருவெண்ணெய்நல்லூ
ராலயத்தின்பெயர்

உருகிநற்றமிழோதி யடியினிற்பணிசீல
ரொருவர்சொற்புகழ்மாலையே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே (௬௩

(காவிரிநதிவழிவிட்டது)

பரிகரித்திரளான பொருபடைக்கடலோடு
பருவரைக்குலநாடனார்
இருநிதித்திரளுவ னகருதித்தெமையாளு
மிறைவரக்கரைசேரவே
வரையினுற்றிழிகாவி ரியினடுப்புனருனும்
வழிவிடச்செயுமாதியார்
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௪)

(முதலைவாய்ப்பிள்ளைதந்தருளியது)

தருவளத்தவிநாசி யிறைவர்முப்புரநீறு
தரநகைத்தவராதியார்
அருளினிற்கலைவேத குலமணிச்சிறுபால
னலைபுனற்கரைமீதிலே
வரமறைத்தமிழோதி முதலைகக்கிடவேசெய்
மகிமைபெற்றவர்பாடலே

திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (கூரு)

(கூன்குருடுநீங்கவோதியருளியது)

ஒருமனத்துடனேத மிடையடுத்தடியாரி
னுவகைமுற்றியகூனனார்
தருநிலத்திடைமேலை நிகழ்பிறப்புறுதீமை
தனின்விழிக்குருடாயினார்
இருவரப்பிணிதீர வருளடுத்துளநாவ
லிறைவர்முற்புகல்பாடலே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே (கூசா)

(மாணிக்கவாசகசுவாமிகள் அமைச்சரானது)

அரிமருத்தனராச னவையமைச்செனமேவி
யவனியிற்றமரோடுவாழ்
தரினுமப்புலியோடு நிகர்வர்மெய்க்குருநேடு
தருமவித்தகர்கூறினார்
அரையினிற்புலியாடை முடியினிற்புனலோட
வணிமுதற்பொருளாகுவார்

திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬எ)

(குருஉபதேசம்பெற்றருளியது)

அரியுளைத்திரளான குதிரைவிற்றிடுமாரி
யர்கள்கடற்கரைமேவவே
பெரிதினிற்கொளநீடு சிவிகையிற்பொருளோடு
பெயர்வழிக்கணிலாதியார்
குருவினுற்றுபதேச மருள்செயப்பெறுதூயர்
குறியினிற்புகல்பாடலே
திருமறிக்கரநாத் ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬அ)

(நரிபரியானது.)

நரிபரித்திரளாகி மதுரைநற்பதிவீதி
நணுகுறச்செயுமாயதோர்
நரிநரித்திரளாகி யரசனற்பரியாவி
நலிதரக்கொலையாடியே
கரிசரித்திடுகான மதிலடுத்திடுமாறு
கலகமுற்றிடநேருமே
திருமறிக்கரநாத ரொருபிறைச்சடைநீதர்
திருநெறித்தமிழ்வேதமே. (௬௯)

குருவடித்தலம்வாழ்க மடபதித்தவர்வாழ்க
குவலயத்துயிர்வாழ்கவே
அருமறைக்குலம்வாழ்க அதுபயிற்றுநர்வாழ்க
அமலர்பொற்பதிவாழ்கவே
இருளகற்றிடுநீறுே டிலருத்திரபார்வை
யெனுமணிக்குலம்வாழ்கவே
திருநெறித்தமிழ்வேத முடனுரைத்தவர்வாழ்க
சிவனருட்டளிவாழ்கவே (௩)

திருச்சிற்றம்பலம்

திருநெறித்தமிழ்வேதச்சந்தப்பாமாலை.

முற்றுப்பெற்றது.

